தமிழிசைப் பாடல்கள்

பதினாறாந்தொகுதி

WITH COURAGE AND FAITH

1948

ANNAMALAI UNIVERSITY ISAI TAMIL SERIES—VOL. XVI

தமிழிசைப் பாடல்கள்

பதினாறாந் தொகுதி

1948

தொகுத்தவர்

பண்டித வித்துவான்

லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து இசைத்தமிழ் வெளியீடு - XVI

வையைச்சேரி

இராமசாமி ஐயரவர்களியற்றிய
இசைப் பாடல்கள்

இசைப்படுத்தியவர் சங்கீத வித்துவான்
திரு. காளிதாஸ் நீலகண்ட ஐயரவர்கள்

சுரப்படுத்திப் பரிசோதித்தவர்
வீணை வித்துவான்
திரு. V. S. கோமதி சங்கர ஐயரவர்கள்

சரித்திரக் குறிப்பு எழுதிப் பரிசோதித்தவர்
வித்துவான்
திரு. க. வெள்ளைவாரணனாரவர்கள்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரால்
தருமபுர ஆதீனம் ஞானசம்பந்தம் அச்சகத்திலும்
திருச்சி யுனைடட் பிரிண்டர்ஸ் லிமிடெட்டிலும்
பதிப்பிக்கப்பெற்றன
1948

[விலை ரூபாய் 3-0-0

உள்ளுறை

மகாமகோபாத்தியாய பண்டிதமணி

திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்கள்

இயற்றியவை

கடவுள் வாழ்த்து

ஆசிரிய விருத்தம்

பூவார் மணம்போல் உலகமெலாம்
பொருந்தி யியங்கும் பெரும்பொருளே
புனிதம் நிறைந்த வுணர்வுடையோர்
புகழிற் கிடக்கும் புண்ணியனே

நாவார் கலைகள் துணிபொருளா
நவில்நா யகனே மெய்யுணர்வின்
நலமார் வடிவே யா திருளை
நலிந்து விளங்கி நலன்பர்

தூவார் உளத்திற் சுடர்விளக்கே
துகளற் றொடுங்கித் தமைமறந்து
துய்ப்பார்க் கினிய செழுந்தேனே
தோன்றாத் துணையே அறுவரெனும்

மேவார் தமைச்செற் றுளந்தெளிந்தோர்
வினைமா சறுக்கும் மெய்ப்பொருளே
விரும்பிப் பணியும் எம்மையருள்
வெள்ளத் தியைத்துக் காத்தருளே.

அண்ணாமலைப் பல்கலைக்கழக வாழ்த்து

கட்டளைக் கலித்துறை

கண்ணார் மணியிற் புரப்போ ரெனும்பொருட் கார்பொழிந்த
தண்ணார் நிதிநீர்ச் செழிப்பிற் கலைப்பயிர் தான்வளர்க்கும்
அண்ணா மலைப்பல் கலைக்கழ கப்பே ரணிநிலையம்
விண்ணார் புகழொடு நாளுநா ளோங்கி விளங்குகவே.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவிய

செட்டி நாட்டரசர்

உயர்திரு. டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார்



உருவச் சிறப்பு

ஊக்கம் உறுதி உணர்ச்சி யருஞ்செயலின்
ஆக்கம் அறம்புகழன் பாண்மைமுதல்—நீக்கமறக்
காண்டற் கமைந்த கவினுரு அண்ணாமலைமன்
ஆண்டகையின் நல்லுருவ மாம்.

மகாமகோபாத்தியாய—பண்டிதமணி

மு. கதிரேசச் செட்டியார்.

மகாமகோபாத்தியாய—பண்டிதமணி

திரு. மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் கூறிய

வாழ்த்து

சீர்மலி கொடையால் அறிவினால் ஆற்றுஞ்
 செயற்கருஞ் செயலினால் உலகிற்
பேர்மலி புகழாற் பல்கலைக் கழகம்
 நிறுவிய பெருமையாற் சிறந்தோன்
ஏர்மலி தருநல் இசைத்தமிழ் வளர்க்கும்
 ஏந்தல்நம் செட்டிநாட் டரசாம்
நார்மலி யுளத்தண் ணாமலை வள்ளல்
 நலமுற நீடுவா ழியவே.



இசைக்கல்லூரி (அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

உ

சங்கீத ரத்னுகர, சங்கீத கலாநிதி, காயகசிகாமணி,
மைசூர் ஆஸ்தான வித்துவான்
அரியக்குடி இராமானுஜ ஐயங்கார் அவர்கள்
எழுதிய

முகவுரை

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தாரால் வெளியிடப் பெற்று வரும் தமிழிசை நூல்களில் இது 16வது தொகுதி யாகும். இந்தத் தொகுதிக்கு முகவுரை எழுதும் பெருமை எனக்குக் கிடைத்தது கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடை கிறேன். மறைந்து மங்கிக்கிடந்த தமிழ் நாட்டு இசைச் செல் வங்கள் செட்டிநாட்டு வள்ளலாகிய ராஜா ஸர் அவர்கள் பேராதரவின் பயனுக வெளியிடப்பெற்றுச் சில வருஷங்களுக் குள் ஆயிரக்கணக்காக அச்சிடப்பெற்றுத் தமிழ் நாட்டில் இசைப் புலவர்கள் பல இசை அரங்குகளில் பாடப்பெற்றுத் தமிழர்களுக்குத் தெவிட்டாத இன்னிசை அமுதமாகத் திகழ் கின்றன. ராஜா அவர்களுடைய பெரும் கொடையின் பயனுக அவர்கள் ஸ்தாபித்த பல்கலைக்கழகத்தின் வாயிலாக இது வரையில் 15 பாமலர்த் தொகுதிகள் வெளிவந்திருக்கின்றன. இது 16வது தொகுதி. பல்கலைக்கழகம் என்றும் 16 ஆக விளங்கி இதுபோன்ற தொகுதிகள் இன்னும் பலவற்றை வெளியிட்டுத் தமிழ் நாட்டுக்கும் இசைக்கலைக்கும் பெரும் தொண்டாற்றிப் பெருமைபெற்று விளங்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

இந்த 16ஆ தொகுதி மற்றைய தொகுதிகளைக்காட்டிலும் ஒரு தனிச்சிறப்புப் பெற்று விளங்குவது குறிப்பிடத்தக்கது. இதில் மொத்தம் 65 கீர்த்தனைகள் இசை வகுக்கப்பெற்று சுரதாளக் குறிப்புகளுடன் வெளியிடப்பெற்றிருக்கின்றன. அவற்றில் கந்தபுராணச் சுருக்கக் கீர்த்தனைகள் 40. சைவ

சமயாச்சாரியர்களில் ஒருவராகிய மாணிக்கவாசக சுவாமி களுடைய சரித்திரக் கீர்த்தனைகள் 25. இவற்றை இயற்றிய வர் வையச்சேரி மஹா வைத்தியநாத சிவன் அவர்களுடைய சகோதரராகிய பிர்ம்மஸ்ரீ இராமசாமி சிவன் அவர்கள். இசை உலகில் மஹா வைத்தியநாத சிவன் அவர்கள் இணையற்று விளங்கியதைத் தமிழ் உலகம் நன்கறியும். அவருடன் கூடவே இருந்து வினிகைகளுக்கு உடன் சென்று வைத்தியநாத சிவன் அவர்களுக்கு வலது கரம்போல் எப்பொழுதும் உதவிவந்தவர் இராமசாமி சிவன் அவர்களே. சகோதரர்கள் இருவரும் அக் காலத்தில் தமிழ்ப்புலமையில் ஒப்பற்று விளங்கிய மகா வித்துவான் திரு. மீனுக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்ததும் அன்றி, அவருடைய பழக்கத்தினுல் சிறந்த தமிழ் அறிவையும் பெற்ருர்கள். இராமசாமி சிவன் அவர்கள் தம்பியைப்போலவே சிவபக்தியும் ஒழுக்கமும் வாய்ந்தவர். ஆகையால் அவர் சிந்தனை எல்லாம் சேர்ந்து சிறந்த கீர்த்தனங்களாக வெளிவந்ததென்ருல் அது மிகையாகாது.

அவர் இயற்றிய கீர்த்தனைகளின் அமைப்பு அவருடைய வாக்கின் திறமையை விளக்கிக் காட்டுகின்றது. இராமசாமி சிவன் அவர்கள் இத்தகைய அற்புதமான கீர்த்தனங்களை இயற்றித் தமிழ் நாட்டிற்கும் இசைக்கலைக்கும் பெருமையை அளித்துச் சிறந்த சாஹித்ய கர்த்தாக்களில் தாமும் ஒருவர் என்ற அழியாப் புகழையும் தேடிக்கொண்டார். வாக்கு நயமும் பொருட்சிறப்பும் மலிந்த சிவன் அவர்களுடைய கீர்த் தனங்கள் பண்டித பாமரர்கள் யாவரும் கேட்டு மகிழத்தக்க இசைமணிகள் எனத்தகும். இவ்வளவு சிறந்த சாஹித்தியங் களை வையச்சேரி சிவன் சகோதரர்கள் இருவருமே இயற்றி ஞர்கள் என்ருலும் தவருகாது.

சென்னை சங்கீத அக்காடமி தலைமை ஆசிரியராகிய ஸ்ரீமான் காளிதாஸ நீலகண்ட ஐயர் அவர்கள் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழிசை ஆலோசனைக் கமிட்டியாரின் வேண்டுகோளுக்கிணங்கி இந்தக் கீர்த்தனங்களுக்குத் தமது கேள்வி ஞானத்தையும் இயற்கைப் புலமையையும் துணையாகக்

கொண்டு தகுந்த முறையில் இசை வகுத்து உதவினர் சாஹித்தியங்களின் அருமை அறிந்து பொருள் உணர்ந்து பாவங்களுக்கு ஏற்ற முறையில் இசை வகுத்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது.

இராமசாமி சிவன் அவர்களுடைய முத்துக்குமரய்யனே, எக்காலத்திலும் மறவேனே, கடைக்கண்வைத்தென்னை ஆளம்மா, வேறு துணை காணேனே, அன்னையே என்னை ஆண்டருள்வாய், முதலிய கீர்த்தனங்கள் பிரசித்தமானவை. இது போன்ற அவருடைய விடுதிக்கீர்த்தனைகள் எல்லாவற்றையும் தொகுத்து அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தார் வெளியிடுவார்களானல் அந்தக் கீர்த்தனைகள் அவர்கள் இயற்றிவரும் தமிழிசைத் தொண்டுக்குச் சிகரம் வைத்ததுபோல் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

சங்கீதத்திற்குச் சுருதி சம்பந்தமான இராகக்ஞானம் இன்றி யமையாததாய் இருப்பதுபோல் லய சம்பந்தமான தாளக்ஞானமும் அவசியமாகும், என்பதை விளக்கிக் காட்டுவதுபோல் சதுஸ்ரஜாதி மட்டியம், கண்டஜாதி திருபுடை, மிஸ்ரஜாதி ஜெம்பை, மிஸ்ரஜாதி திருபுடை இத்தாளங்களிலும் சில கீர்த்தனைகள் அழகாக அமைந்திருப்பது இந்த வெளியீட்டின் சிறப்பைப் பன்மடங்கு அதிகரிக்கச் செய்கிறது. இந் நூலில் குறிப்பிட்டுள்ள ராக தாளங்கள் பண்டித பாமரர் யாவர்க்கும் பழக்கமானவைகளே. சங்கீதத் துறையில் தேர்ச்சி பெற்ற வித்துவான்களுக்கும் தேர்ச்சிபெற விரும்பும் வித்யார்த்திகளுக்கும் இந்தத் தொகுதி பேருதவியாக விளங்கத் தக்கது.

இந்தத் தொகுதியிலுள்ள கீர்த்தனைகளை மேற்கூறிய காளிதாஸ நீலகண்ட ஐயர் அவர்கள் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திற்கு வந்திருந்து பாடிக்காட்ட, கழக வீணை ஆசிரியர் ஸ்ரீமான் கோமதி சங்கரையர் அவர்கள் அந்த வர்ணமெட்டுகளுக்கேற்ப ஸ்வரப்படுத்தி உதவி உள்ளார். சிவன் சகோதரர்களுடைய பிரதம சிஷ்யர் என்ற பெருமைவாய்ந்த வாசுதேவநல்லூர் ஸ்ரீ சுப்பையா பாகவதர் அவர்களுடைய குமார

ரும் அண்ணமலை சர்வகலாசாலை வீணை ஆசிரியருமாகிய இவர் இந்த சாஹித்தியங்களுக்கு ஏற்ற முறையில் ஸ்வரம் அமைத்திருப்பது மிகவும் போற்றத்தக்கது. ஒருவருடைய பாடலுக்கு மற்றொருவர் ஸ்வரம் அமைப்பது எளிதல்ல. சங்கீதத்துறையில் நீண்டகால அனுபவமும் தேர்ந்த அறிவும் பெற்றவருக்கு ஸ்வரம் அமைப்பதிலுள்ள ஸ்ரமங்கள் நன்கு தெரியும். கீர்த்தனைகளையும், அவற்றின் இராகங்களையும் நன்ருகத் தெரிந்து கொண்டு அவைகளில் இசை நுட்பங்கள் ஏற்ற இடங்களில் ஒழுங்காக அமையுமாறு ஸ்வரம் அமைத்திருப்பது ஆசிரியருடைய ஸ்வரக்ஞானத் திறமையையும் சங்கீதத் தேர்ச்சியையும் விளக்குகின்றது என்பதை இப்புத்தகம் முழுவதிலும் உள்ள கீர்த்தனைகளைப் பரிசோதித்துப் பார்த்ததின் பயனுகக் கூறுகின்றேன்.

அரியக்குடி இராமானுஜ ஐயங்கார்.

வையைச்சேரி இராமசாமி ஐயரவர்கள்

வாழ்க்கை வரலாறு

வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனார்

எழுதியது

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் தோன்றி இசைத்தமிழை வளர்த்த இயலிசைப் புலவர் இராமசாமி ஐயரவர்களையும் அவருடன் பிறந்த தம்பியார் இன்னிசைப் பெரும் புலவர் மகா வைத்தியநாத ஐயரவர்களையும் தமிழகம் நன்குணரும். வையைச்சேரி என்னும் சிற்றூர் தஞ்சை சில்லாவில் திட்டை என்னும் ஊருக்கு வடக்கேயுள்ளதாகும். அவ்வூரில் தமிழ்க் கல்வியிலும் இசையிலும் வல்லவர் பலர் இருந்தனர். வையைச்சேரியில் மழநாட்டுப் பிரகசரண வகுப்பைச்சார்ந்த மறையவர் குடும்பத்தில் தோன்றிய துரைசாமி ஐயர் என்னும் வித்துவான் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவரது சர்மா நாமம் பஞ்சநதையர் என்பதாகும். இவர் இசைப் புலவர் பலராலியற்றப்பெற்ற தமிழ் தெலுங்கு வடமொழியிசைப் பாடல்களைப் பாடுவதில் நிரம்பிய பயிற்சியுடையவராவர். தஞ்சை மகராட்டிர மன்னராற் பெருஞ் சிறப்புப் பெற்று இசைப்பாடலியற்றிய ஆனை, ஐயா என்பவர்களின் பரம்பரையினர் வையைச்சேரியில் வாழ்ந்துவந்தனர். அக்குடும்பத்திற் பிறந்த ஒருவருடைய பெண்ணையே பஞ்சநதையர் மணந்துகொண்டார். சிறந்த சிவபத்தி நிரம்பப்பெற்றவராகிய இம்மறையவர் திருவையாற்றுத் திருக்கோயிலையடைந்து ஐயாறப்பர் திருமுன்னிலையில் நின்று அப்பெருமானை இன்னிசைப் பாடல்களால் பாடிப் போற்றுவதனையே தம் வாழ்க்கை நோக்கமாகக் கொண்டார். திருவையாற்று ஏழூர் விழாவில் இசையாளர்களுடன் சேர்ந்து இறைவன் புகழ்ப் பாடல்களை உளமுருகிப் பாடிச் செல்வதனை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

பஞ்சநதையரவர்களுக்கு சாம்பமூர்த்தி, இராமசாமி, வைத்தியநாதன், அப்பாசாமி என்னும் நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களுள் இரண்டாம் புதல்வராகிய இராம

சாமி ஐயரும் மூன்றுமவராகிய வைத்தியநாதையரும் இயற்றமிழிலும் இசைத்துறையிலும் சிறந்த நுட்பமுடையவராய்க் காணப்பட்டனர். இவ்விருவரும் தம் தந்தையாரிடத்தில் இசை பயின்றனர். பின்னர் இசைக்கதை நிகழ்த்துதலில் வல்லவரான தஞ்சை மகரநோன்புச்சாவடி வேங்கட சுப்பிரமணிய ஐயரிடம் இசையின் இலக்கிய இலக்கணங்களை நன்கு பயின்றனர். இவர்கள் இருவரும் உடன்பிறப்பினர் என்பதற்கேற்பக் கல்வித்துறையிலும் இணை பிரியாது உடன் பழகியதைக் கண்டோர் இவர்களை இரட்டையர் என அழைப்பது வழக்கம். இராமசாமி ஐயரவர்கள் ஓய்வு நேரங்களில் தமிழ்வல்ல புலவர்களையடைந்து சிறந்த தமிழ் நூல்களைப் பயின்று வருவாராயினர். சைவசமய நூல்களாகிய பன்னிரு திருமுறைகளையும் ஆர்வத்துடன் பயின்றுவந்தார். இவர் தம்பி வைத்தியநாதையர்பால் இசைக்கேற்ற குரலினிமை சிறப்பாக அமைந்திருந்தது. அதனால் எல்லோரையும் மகிழ்ச்சியிற்றிளைக்க வைக்கும் இசைத்திறனை வைத்தியநாதையர் பெற்று விளங்கினார். அவர் இசையரங்கு நிகழ்த்தும்பொழுது இராமசாமி ஐயரும் உடனிருந்து பாடுவது வழக்கம்.

தமிழ்ப் புலமையிற் சிறந்து விளங்கிய இராமசாமி ஐயரவர்கள் தாம் பயின்ற இசைத்துறைக்குப் பொருந்தத் தம் உள்ளத்துணர்ச்சிகளைப் பாடலாக வெளியிடும் திறமையினைப் பெற்றிருந்தார். இளம் பருவத்தினராகிய இவரும் பத்து வயது நிரம்பிய தம் தம்பியார் வைத்தியநாதையரும் புதுக்கோட்டை யரசர் இராமச்சந்திரத்தொண்டைமான் அவையில் சிறந்த இசையரங்கினை நிகழ்த்தி அரசரால் உயர்ந்த பரிசில் தந்து பாராட்டப்பெற்றார்கள். அப்பொழுது மழவராயனேந்தலிலிருந்து புதுக்கோட்டை மன்னர் அவையில் அவதானம் செய்து காட்டிய தமிழ்ப் புலவரைச் சிறப்பித்து இராமசாமி ஐயர் ஓரிசைப் பாடலைப் பாடினார். அதனைக் கேட்டார் பலரும் இவருடைய இயலிசைத் திறத்தைப் பாராட்டி மகிழ்ந்தார்கள். பின்னர் இவ்விருவரும் மதுரையினையடைந்து அங்குள்ளார் வேண்டுகோளுக்கிணங்கி இன்னிசை பாடி ஆலவாய்ப்பெருமானையும் அங்கயற்கண்ணியம்மையையும் வணங்கிப் போற்றினார்கள். பின்னர் தமிழ்ப்புலமையும் இசைத்

திறனும் நிரம்பப்பெற்ற இராமநாதபுர மன்னர் முத்துராம லிங்க சேதுபதியவர்களைக் காணும் விருப்புடன் இராமநாத புரத்தையடைந்து அரசர்பேரவையில் இசைத்தமிழ்ப் பாடல் களைக் கேட்போர் உளங்குளிரும்படி பாடிச் சேதுபதியவர்களை மகிழ்வித்தனர். இவ்வாறு மூன்று மாதங்கள் இராமநாத புரத்தில் தங்கி இவ்விருவரும் வரையாது வழங்கிய இசை யமுதைச் செவியாற் பருகிய சேதுபதியவர்கள் இவ்விருவருக் கும் நிறைந்த பரிசில் தந்து பாராட்டினார்கள். இராமசாமி ஐயரவர்களுக்கு இனிய செய்யுளியற்றும் ஆற்றலும் அவர் தம்பி வைத்தியநாதையரவர்களுக்கு இனிய இசைப்பயிற்சியும் வாய்த்திருப்பதையுணர்ந்து வைத்தியநாதையரவர்களை நோக்கி, "தங்கள் தமையனார் இராமசுவாமி ஐயரவர்களைப்போலத் தாங்களுஞ் செந்தமிழ்ப் பயிற்சி செய்யில் சர்க்கரைப்பந்தலில் தேன்மாரி பெய்ததுபோற் சிறப்புற்றிருக்கும்" என்று சொல்லி, கந்தபுராணச் சுருக்கம் என்ற புத்தகத்தை முதல் இலக்கியமாக அவரிடம் வழங்கினார்கள் எனவும் சேதுபதியவர் களின் கைக்கமலங்களால் வழங்கப்பெற்ற அவ்விலக்கியத்தை வைத்தியநாதையர் தன் தமையனார் இராமசுவாமி ஐயரவர் களிடம் கற்றுத் தெளிந்ததுடன் ஏனைய தமிழ் நூல்களையும் பயின்று தமிழ்ப்புலமை பெற்றாரெனவும் இராமசாமி ஐயரவர் கள் தாம் எழுதிய மகாவைத்தியநாத விஜய சங்கிரஹம் என்ற புத்தகத்திற் குறிப்பிட்டுள்ளார்கள். இங்ஙனம் சேதுபதி யவர்கள் கந்தபுராணச் சுருக்கத்தை அன்புடனளித்ததன் நோக்கம் அதன்கட் காணப்பெறும் முருகன் வரலாற்றை இன்னிசைக் கதையாகத் தமிழ்நாடெங்கும் பரப்புதல்வேண் டும் என்னும் ஆர்வமே என இராமசுவாமி ஐயரவர்கள் தெரிந்துகொண்டார்கள். அக்கருத்தே பிற்காலத்தில் கந்த புராணச் சுருக்கத்தை முதல் நூலாகக்கொண்டு கந்தபுராணச் சுருக்கக் கீர்த்தனைகளை இயற்றும்படி தூண்டியிருத்தல் வேண்டும்.

தன் தம்பியாருடன் எட்டையபுரஞ் சென்று எட்டையபுர அரசர் அவையில் நன்கு மதிக்கப்பெற்ற இராமசாமி ஐயரவர் கள் அங்குள்ள சில வித்துவான்களின் விருப்பப்படி தமிழில் இராகமாலிகை பாடி அரங்கேற்றினார் என்பர். பின்னர்

திருநெல்வேலி சென்றபொழுது ஆழ்வார்குறிச்சித் தளவாய் குமாரசாமி முதலியார் மாளிகையில் ஆறு திங்களளவு தங்கி அவரால் ஆதரிக்கப்பெற்றுத் தம் தம்பியாருடன் திருச்செந்தூர் சென்று முருகப்பெருமானை யிறைஞ்சித் திருச்செந்திற் சந்த விருத்தம், திருச்செந்தில் யமக அந்தாதி என்னும் இரண்டு பிரபந்தங்களையும் இயற்றிப் புலவர் பலர் கூடிய அவையில் அரங்கேற்றினார்கள். பின்னர்க் கல்லிடைக்குறிச்சிக்குச் சென்று அங்குத் திருவாவடுதுறை யாதீனத்துக்குரிய திருமடத்தில் எழுந்தருளிய திருவாவடுதுறை யாதீனத்தின் பதினாறும் பட்டத்தினராகிய மேலகரம் சுப்பிரமணியதேசிகரவர்களைக் கண்டு அளவளாவினார்கள். தை மாதம் அசுவதி குரு பூசைத் திருநாளில் இராமசுவாமி ஐயரும் அவர் தம்பியார் வைத்தியநாதையரும் பாடிய இசை நயத்தில் ஈடுபட்ட சுப்பிரமணியதேசிகரவர்கள் இவ்விருவரையும் பாராட்டிப் போற்றியதைக் கண்டு அங்குள்ள பழைய வித்துவான்களாகிய பெரிய வைத்தியநாதையர் சின்ன வைத்தியநாதையர் என்னும் இருவரும் பொறாமையடைந்து இவர்களை நாளை இசையில் வென்றுவிடுகின்றோம் என்று கூறினர். அது கேட்ட பண்டார சன்னிதியவர்களும் வித்துவான் தாண்டவராயத் தம்பிரானவர்களும் அன்றிரவில் வீணை சின்னையா பாகவதரைத் தீர்ப்புக் கூறுவோராக அமைத்துப் பெரிய வைத்தியநாதையர் சின்ன வைத்தியநாதையர் என்னும் இருவருடன் வையைச்சேரி வைத்தியநாதையராகிய இளைஞரைப் பாடச் செய்தார்கள். இவ்விசைப் போட்டியில் வையை இராமசுவாமி ஐயரவர்களின் தம்பியாகிய வைத்தியநாதையரவர்களே அவையிலுள்ளார் யாவரும் வியந்து பாராட்டும் வண்ணம் மிகத் திறமையாகப் பாடி அவ்விருவரையும் இசைத்துறையில் வென்று மேம்பட்டார். அதனைக் கண்டு வியந்த பண்டார சன்னிதியவர்கள் மகாவைத்தியநாதையர் என்னும் சிறப்புப்பட்டத்தினை இவருக்கு அளித்துப் பாராட்டினார்கள். இவ்வாறு தம் தம்பியார் பெற்ற சிறப்பினைக்கண்டு இராமசுவாமி ஐயரவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. மேலகரம் சுப்பிரமணிய தேசிக சுவாமிகளாற் பாராட்டப்பெற்ற இராமசுவாமி ஐயரவர்களும் அவர் தம்பி மகாவைத்தியநாதையரும் வேதாந்த வுண்மைகளைத் தெளியவுணர்ந்த பெரியாரும் தம் உள்

ளத்துறவினால் வருண வேற்றுமைகளை நீக்கித் தெய்வத் தன்மை விளக்கிய பரம தேசிக சிகாமணியும் ஆகிய கோடக நல்லூர்ச் சுந்தர சுவாமிகளை யடைந்து வழிபட்டு அச்சுவாமி களிடம் வடமொழிபயின்று வேதாந்த நூல்களையும் சதுர் வேத தாற்பரிய சங்கிரகம், சிவதத்துவ விவேகம் முதலிய நூல்களையும் கந்தபுராணம் முதலிய புராணங்களையும் நன்று கக் கற்றுணர்ந்து அப்பொருள்களைச் சொற்பொழிவு வாயி லாக எடுத்து விளக்கும் திறமையும் பெற்றார்கள். இவர்களு டைய குருவாகிய கோடக நல்லூர்ச் சுந்தரசுவாமிகளே மனோன்மணிய ஆசிரியரும் தத்துவ நூற் பேராசிரியரும் ஆகிய திருவனந்தபுரம் சுந்தரம்பிள்ளையவர்களின் ஞானாசிரியராவார் கள். இச்சுந்தரசுவாமிகள் சிவபெருமான் திருப்பணிகளில் ஈடுபட்ட நற்சிந்தையுடையவர்களாய்த் தேவகோட்டை முத லிய இடங்களுக்குச் சென்று அன்பர்கள் தந்த நான்கு நூறா யிரம் ரூபா அளவில் பொருள் தொகுத்துத் திருவையாறு முத லிய திருக்கோயில்களுக்குப் பல திருப்பணிகளைச் செய்தார்கள். இராமசாமி ஐயர் அவர் தம்பி மகாவைத்தியநாதையர் இரு வரும் தொடக்கம் முதற்கொண்டு சுந்தரசுவாமிகளின் திருப் பணிகளிற் பங்குகொண்டு உடனிருந்து பணிபுரிந்தார்கள். சைவத் திருமுறைகளைப் பாராயணஞ் செய்தலிலும் சிவனடி யார் வரலாறுகளை யறிந்து மகிழ்தலிலும் பெருவிருப்புடைய இவ்விருவரும் சுந்தரசுவாமிகளிடம் தாம் ஓதியுணர்ந்த நற் பொருள்களையுளத்தமைத்து சிவபெருமானது புகழ்பற்றிய இன்னிசைச் சொற்பொழிவுகளைத் தமிழ் நாடெங்கும் நிகழ்த் திச் சமயவுணர்வையும் தமிழிசையையும் பரப்பினார்கள். இவ் விருவருள் இராமசாமி ஐயரவர்கள் செந்தமிழ்ப் புலமை நிரம்பப்பெற்றவராதலின் மகாவைத்தியநாதையரவர்கள் பாடுதற்கேற்ற இன்னிசைப்பாடல்களை அவ்வப்போது இயற் றிக்கொடுக்குந் தமிழ்த்தொண்டில் ஈடுபடுவாராயினர்.

திருவாவடுதுறை யாதீனத்தில் தைமாதம் அசுபதிநாளில் நிகழும் குருபூசைக்கு இராமசாமி ஐயரவர்களும் அவர் தம்பியார் மகாவைத்தியநாதையரவர்களும் ஆண்டுதோறும் சென்றுவருவது வழக்கம். திருவாவடுதுறை யாதீனத்தில் அம்பலவாண தேசிகரவர்கள் பெரிய பட்டத்தில் எழுந்

தருளியிருந்தார்கள். அப்பொழுது சின்னப்பட்டத்தில் உடனிருந்தவர் மேலகரம் சுப்பிரமணிய தேசிகராவர். திருவாவடுதுறை யாதீனத்தார் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களை ஆதீனத்து மகாவித்துவானாக நியமித்தார்கள். அந்த ஆண்டில் இராமசாமி ஐயரவர்களும் மகாவைத்தியநாதையரவர்களும் திருவாவடுதுறைக்குச் சென்றிருந்தார்கள். இவ்விருவரும் பிள்ளையவர்கள் பாடிய சூதசங்கிதை முதலிய நூல்களை முன்னரே படித்தவர்களாதலின் அக்காலத்தில் தன்னிகரற்ற பெரும்புலவராய் விளங்கிய மகாவித்துவான் பிள்ளையவர்களைப் பார்க்கவேண்டுமென விரும்பினார்கள். அவ்வாறே பிள்ளையவர்களைக்கண்டு அளவளாவும்பொழுது அவர்கள் பாடிய சூதசங்கிதைப் பாடல்கள் சிலவற்றை இசையுடன் பாடினார்கள். தமிழ்ப்புலமையும் இசைத்திறமும் ஒருங்கமையப்பெற்ற இவர்களிருவரையும் மகாவித்துவான் பிள்ளையவர்கள் பாராட்டி வியந்தார்கள். பின்பு மகாசந்நிதானம் அவர்களின் திருமுன்பு இராமசாமி ஐயரும் மகாவைத்தியநாதையரும் சிவகதைகளை இன்னிசைச்சொற்பொழிவாக நிகழ்த்தினார்கள். இவ்விருவருடைய இயலிசைத் திறத்தை மெச்சிய பண்டார சந்நிதியவர்கள் இவ்விருவருக்கும் பொன்னிழைத்த உருத்திராக்கக் கண்டிகை, வைரமோதிரம், வைரக்கடுக்கன் முதலிய அணிகலன்களைப் பரிசாக அளித்துப் பாராட்டினார்கள். அச்சபையில் வந்திருந்த மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் அருமையான செந்தமிழ்ச் செய்யுட்களால் இவர்களுடைய இசைத்திறத்தைப் போற்றிப் புகழ்ந்தார்கள். அவ்வாறே பிள்ளையவர்களின் மாணாக்கர் பலரும் பல பாக்களைப்பாடிப் பாராட்டினார்கள். பிள்ளையவர்கள் மாணாக்கருள் ஒருவராகிய மாயூரம் முனிசிப் வேதநாயகம் பிள்ளையவர்களும் இவர்களை மாயூரத்திற்கு அழைத்துச்சென்று இன்னிசை யரங்கு நிகழ்த்தச்செய்து உபசரித்துப்பரிசில் தந்து பாராட்டினார்கள்.

சைவத்திருமுறைகளைப் பாராயணஞ் செய்தலிலும் அடியார் வரலாற்றை யறிந்து மகிழ்தலிலும் பெருவிருப்புடைய இராமசாமி ஐயரவர்கள், சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணத்தை முதல் நூலாகக்கொண்டு சிவனடியார் வர

லாற்றை இன்னிசைப்பாடலாக அமைத்துப் பெரிய புராண கீர்த்தனம் என்ற நூலை இயற்றித் தாம்பிறந்த ஊராகிய வையைச் சேரியிலுள்ள இறைவன் திருக்கோயிலில் இசை யுடன் அரங்கேற்றினர்கள். இச்செய்தி,

சீர்வளரும் பஞ்சநத மறையோ னன்பாற்
செயவளருந் தவத்திலுதித் திராமசாமிப்
பேர்வளரு மாமறையோன் சேக்கிழார்செய்
பெரிய புராணத்தினைக்கீர்த் தனங்களாக
ஏர்வளரும் படிபாடி யறிஞர் கேட்ப
எழில்வளரும் பொழில்வளரும் வையைதன்னில்
ஆர்வளருந் திருமுடியார் சந்நிதானத்
தலகிலிசை வளரவரங் கேற்றினனே.

என வையை மகாலிங்கையரவர்கள் பாடிய சிறப்புப்பாயிரச் செய்யுளால் நன்கு விளங்கும்.

இப் பெரியபுராணக் கீர்த்தனத்தைத் திருவாவடுதுறை யாதீனத்தில் மகா சந்நிதானமவர்களின் திருமுன்பு இராமசாமி ஐயரும் மகாவைத்தியநாதையரும் சேர்ந்து இசையுடன் பாடினர்கள். அப்பொழுது அதனைக் கேட்டோர் யாவரும் அன்பினல் உள்ளமுருகினர்கள். சேக்கிழார் பெருமான் பத்திச் சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய அன்பு நூலாகிய பெரிய புராணத்தின் இனிமையையும் சிவனடியார் தொண்டின் திறத்தையும் பெரிய புராண கீர்த்தனமாகிய இசைப் பாடல்கள் நன்கு வெளிப்படுத்தினமையறிந்து மகாவித்துவான் மீனட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் அந்நூலுக்குச் சிறப்புப்பா யிரமாக ஐந்து செய்யுட்களைப் பாடி நூலாசிரியராகிய இராம சாமி ஐயரவர்களைப் பாராட்டினர்கள்.

"நாடுவா னவர்முனிவர் தொழுதேத்த வானந்த நடனமன்றுள்
ஆடுவான் அடியெடுத்துக் கொடுப்பவுயர் சேக்கிழார் அருளிச்செய்த
பாடுவான் புராணத்தை யெழுதவார் வாயாரப் படிப்பார் இன்பம்
நீடுவான் சிந்திப்பா ரானர்க ளானாலும் நிலத்து வாழ்வார்.

அடியெடுத்துக் கொடுத்தவன் போல் தன்னுமையா திகடமுவி யளவா [வின்பம்
படியெடுத்துக் கொளப்புரியா விதமுணர்ந்தாங் கதினுளநாற் பதமுங் [கொண்டோர்
கொடியெடுத்த நிறத்தவன்வாழ் பதமுதற்பல் பதங்கடந்த குணரும் வேட்கக்
கடியெடுத்து வீசுபல பதஞ்செய்தான் அனையனெவன் கரைவாயென்னில்.

பொன்னிவளந் தருநாடு புரிதவத்தால் வையையெனும் புரிதோன்றிற்று
மின்னியது செய்தவத்தால் பஞ்சநத மாமறையோன் விருப்பின் வந்தான்
மன்னியவன் புரிதவத்தால் மறைநாலு மெனவுதித்த மைந்தர் தம்முட்
பன்னியது தன்னதெனத் தன்னியல்பி னுணருமொரு பான்மை மேயோன்.

சாம்பமூர்த்திக்கிளையான் என்பதலா விளையானெத் தமிழ் வல்லோர்க்கும்
மேம்படுமா வயித்தியநா தனுக்குமூத் தானென்று விளம்பல் போல
வாம்பலவா மிசையினு மூத்தானொழுக்கம் பலதிரண்டா லன்னமெய்யான்
ஓம்பல்புரி யிராமசாமிச் சுகுண மாமறைதே ருயர்ச்சியோனே.

ஓங்குபுக ழிராமசாமிச் சுகுண மறையவன்பாட் டுவந்தான் வாமந்
தாங்குகற்றூரைசையு மருட்சுப் பிரமணிய குருவெனுஞ்சேய் தானு மேவ
வீங்குதுறைசையினுளு மெய்கண்டான் சந்தானம் விளங்க மேயோன்
பாங்குபுனை பொருளும் பலவாண தேசிகனெம் பரமன்றானே.

என வரும் பாடல்கள் மகாவித்துவான் பிள்ளையவர்கள் பெரிய புராண கீர்த்தனத்தைச் சிறப்பித்துப் பாடியனவாகும். பிள்ளையவர்களின் மாணவருளொருவராகிய தியாகராசச் செட்டியாரவர்களும் புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியாரவர்களும் இவ்வாறே பெரிய புராண கீர்த்தனத்தைச்சிறப்பித்துப்பாடியுள்ளார்கள். இப்பெரிய புராண கீர்த்தனம் இற்றைக்கு எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னே திருந்திய முறையில் அச்சிடப்பெற்று வெளிவந்துள்ளது. இதன்கண் ஒவ்வொரு கீர்த்தனத்தின் முன்னும் தொடர்பான வரலாற்றுச் சுருக்கத்தினை விளக்கும் விருத்தப் பாக்கள் அமைந்துள்ளன.

மேற்காட்டிய பெரிய புராண கீர்த்தன அமைப்பையொத்தே இவராற் பாடப்பெற்ற கந்தபுராணச் சுருக்கக் கீர்த்தனமும், திருவாதவூரடிகள் புராணக் கீர்த்தனமும் அமைந்துள்ளன. இவ்வாறே பார்வதி கல்யாணம், சீதா கல்யாணம், மார்க்கண்டேயர் சரித்திரம், பிரகலாதன் சரித்திரம் என்னும் பொருள்பற்றியும் இராமசாமி ஐயரவர்கள் கீர்த்தனங்கள் இயற்றியுள்ளார்கள் எனத்தெரிகிறது. இவர்கள் பாடிய இசைத் தமிழ்ப்பாடல்களையெல்லாம் இவருடைய தம்பியார் மகாவைத்தியநாதையரவர்கள் இன்னிசைச்

சொற்பொழிவுகளாக நிகழ்த்தித் தமிழ்நாடெங்கும் தமிழால் இசைபரப்பினார்கள்.

இராமநாதபுரம் அரசர் முத்துவிஜய ரகுநாத பாஸ்கர சேதுபதியவர்கள் திருமணத்தின்போது பெரிய புராணத்தில் கண்ணப்ப நாயனார் சரித்திரத்தினை இன்னிசையுடன் மகா வைத்தியநாதையரவர்கள் எடுத்துரைத்தார்கள். சேதுபதியவர்கள் இவ்விருவரையும் பின்னுமொருமுறை வரவழைத்துப் பெரிய புராண கீர்த்தனத்தினை இசையுடன் பாடும்படிசெய்து பெரும்பொருளை நன்கொடையாக வழங்கினார்கள். முடி சூட்டு விழாவில் இவர்களை வரவழைத்து வரிசை தந்து பாராட்டியதுடன் ஆண்டுதோறும் இவர்கள் குடும்பத்திற் கென ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்கிவந்தார்கள். இராமசாமி ஐயரவர்கள் பாடிய இசைப்பாடல்களெல்லாம் மோனை எதுகை முதலிய செய்யுள் நலங்களில் சிறந்து விளங்கு தல் கருதிச் சேதுபதியவர்கள் இவருக்கு மோனைச்சிங்கம் என்ற பட்டமும் மானியமும் வழங்கினரென்றும் இதற்குரிய செப்புப்பட்டயம் இன்றுமுளதென்றும் இவருடைய குடும் பத்தார் கூறுவர்.

இராமசாமி ஐயரவர்கள் தம் ஞானாசிரியராகிய கோடக நல்லூர்ச் சுந்தரசுவாமிகளைப்பற்றித் தோத்திரப்பாவினம் என ஒரு நூல் செய்துள்ளார்கள். இவர் செய்த வேறு இயற்றமிழ் நூல்கள் திருச்செந்திற் சந்த விருத்தம், திருச்செந் தில் யமக அந்தாதி, சதுர்வேத தாற்பரிய சங்கிரகம், திருவை யாற்று நிரோட்டக யமக அந்தாதி திரிபந்தாதி, இரட்டை மணிமாலை, திருத்தொண்டர்போற்றிக் கலிவெண்பா என்பன வாம். இணை பிரியாது வாழ்ந்த தம்பியார் மகா வைத்திய நாதையரவர்கள் 27—1—1893ல் காலஞ்சென்றமைக்கு வருந்தி அவருடைய பிரிவாற்றாது இராமசாமி ஐயரவர்கள் பாடிய இரங்கற் பாக்கள் படிப்போர் உள்ளத்தை யுருக்குவனவாம். திருவாங்கூர், மைசூர் முதலிய சமஸ்த்தான மன்னர்களின் சபை களிலும் தமிழ்நாட்டில் இராமநாதபுரம், புதுக்கோட்டை, எட்டையபுரம் ஆகிய சமஸ்த்தானங்களிலும் திருவாவடுதுறை யாதீனத்திலும் தம் தம்பியார் மகா வைத்தியநாதையரவர்கள்

இசைத்துறையில் வெற்றியுடன் விளங்கிய வரலாற்றினை விளக்கி 'விஜய ஸங்கிரஹம்' என்ற தலைப்பில் ஓர் உரைநடை நூல் எழுதி அதனை அவரது நினைவுக்குறியாக வெளியிட்டுள்ளார். மகாவைத்தியநாதையர் இசை பாடும்பொழுது இராமசாமி ஐயரவர்கள் தம்பூரு சுருதியை மீட்டிக்கொண்டு அவருடன் சேர்ந்து பாடுதலுண்டு.

இவர் பாடிய கந்தபுராணச் சுருக்கக் கீர்த்தனமும் மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரக் கீர்த்தனமும் இன்னும் அச்சிடப்பெறவில்லை. இவை இன்னிசைச் சொற்பொழிவுகளுக்கென்றே இயற்றப்பெற்றனவாம். இவற்றின்கண் அமைந்த இசைப்பாடல்கள் யாவும் இன்னோசையாலும் மோனை, எதுகை முதலிய சொல்லணிகளாலும் பொருட்செறிவினாலும் சிறந்து விளங்குவனவாம். இவை யாவும் இசைத்துறைக்கேற்ற இனிமையும் எளிமையும் பெற்றுத் தாள நடைக்கேற்ற சந்தமும் மூடுகியலும் உடையனவாய் விளங்குகின்றன. இவ்விருநூல்களிலிருந்தும் இசையரங்கில் தனித்துப் பாடுதற்குரியன சிலவற்றைமட்டும் தொகுத்து இத்தொகுதி வெளியிடப்பெறுகின்றது.

நற்பொருள்களைக் குறித்துப் புலவர்கள் பாடிய இனிய செந்தமிழ்ப் பாடலுடன் ஒன்றி நிகழும் இசையே சங்க காலத்தில் தமிழ் மக்களால் வளர்க்கப்பெற்றது. இயற்றமிழ்ப் பாடல்களுடன் கூடிய இசை கடவுள் வழிபாட்டுக்குப் பெரிதும் பொருத்தமுடையதாகும். சங்க காலத்தில் திருப்பரங்குன்றத்தில் நிகழும் முருகப்பெருமான் வழிபாட்டில் புரிதலுற்ற யாழ் நரம்பின் ஒலியும் இயற்பாட்டுக்களும் பொருந்திய இன்னிசை பாடப்பெற்ற தென்பதனை 'புரியுறு நரம்பும் இயலும் புணர்ந்து' எனவரும் 18-ஆம் பரிபாடல் அடியால் குன்றம் பூதனார் என்னும் புலவர் குறிப்பிடுகின்றார். தெய்வ வனப்பும் இயற்கை யழகுமே இசைப்பாடற்கு ஏற்ற பொருள்களாம். ஆதலின் இசைப்பாடல்கள் பெரும்பாலும் தெய்வத்தைப் பற்றிய குறிப்புடையனவாகவே இயற்றப்பெறுவனவாயின. இசைத்துறைக்கு இயற்றமிழ்ப் பாடல் உயிர்போன்றது என்னும் உண்மையினை யுணர்ந்த தேவார ஆசிரியர்களும் திவ்

வியப் பிரபந்த ஆசிரியர்களாகிய ஆழ்வார்களும் இசைத்தமிழ்ப் பாடல்களால் இறைவனைப் பாடி இந்நாட்டு மக்களை உய்வித்தருளினார்கள். இசைக்கு இயற்றமிழ் இன்றியமையாதது என்னும் உண்மையினைப் பிற்கால அரசியற் பிறழ்ச்சிகளால் இசைவாணர் மறந்துபோயினர். தமிழ்ப் பயிற்சி யில்லாதார் இசை பாடும் நிலை நாட்டிற் பெருகவே தமிழுக்கும் இசைக்கு முள்ள தொடர்பு சிதைந்துபோயிற்று. தமிழ்ப் பாடலுடன் தொடர்பில்லாத இசை தமிழ் மக்கள் உள்ளத்தை யுருக்கும் ஆற்றலற்றதாயிற்று. அதனால் எல்லா மக்களையும் நன்னெறிக்கண் ஒன்றுபடுத்தவல்ல இசைக்கலையின் பயனும் நிறைவேறுதொழிந்தது. இத்தகைய இடர்க்காலத்தில் தோன்றிய இயலிசைப் புலவர்கள் இராமசாமி ஐயரும் அவர் தம்பி மகா வைத்தியநாதையருமாவார்கள். இசை வளர்த்த குடும்பத்திற் பிறந்த இராமசாமி ஐயர் தாமே இசைப்புலவராக விளங்கியதுடன் நிறைந்த செந்தமிழ்ப் புலமைவாய்ந்த இயற்புலவராகவும் விளங்கினார். தம் வாழ்நாள் முழுவதும் நல்ல தமிழால் இசை பரப்பி நாட்டு மக்களை நன்னெறியிற் பயிற்றுங் கருத்துடன் தொண்டு செய்தமை இவர் வரலாற்றிற் காணும் சிறப்புடை நிகழ்ச்சியாகும்.

குறியீடுகளின் விளக்கம்

ஆ	ஆரோசை. (ஆரோகணம்)
அ	அமரோசை. (அவரோகணம்)
முதல்	முதனிலை. (பல்லவி)
இடை	இடைநிலை. (அனுபல்லவி)
இறுதி	இறுதிநிலை. (சரணம்)
*	இது பாட்டின் சாகித்தியத் துவக்கத்தைக் குறிக்கும்.
,	இது ஒரு அட்சர கால நிறுத்தத்தைக் குறிக்கும்.
;	இது இரண்டு அட்சர கால நிறுத்தத்தைக் குறிக்கும்
|	இது ஒரு தாள வட்டத்தின் பகுதியைக் குறிக்கும்.
||	இது ஒரு தாள வட்டத்தின் முடிவைக் குறிக்கும்.
-	இது சுரங்களுக்கு இடையே இடப்பட்டிருந்தால் அந்தந்த இராகங்களுக்குத் தக்கபடி பதங்களை (சுர அடுக்குகளை)ப் பிரித்துப் பாடுவதைக் குறிக்கும்.
.	இது சுரங்களுக்கு மேலிருந்தால் தாரஸ்தாயியையும், சுரங்களுக்குக் கீழிருந்தால் மந்தரஸ்தாயியையும், சாகித்தியத்தைத் தொடர்ந்து வந்தால் அகார, இகார, உகாரங்களையும் குறிக்கும்.
=	இது சுரங்களின் இடையே இடப்பட்டிருந்தால் ரூபகம், சாய்ப்பு, ஜம்பை இம்மூன்று தாளங்களில் வரும் இரண்டாவது தட்டைக் குறிக்கும்.
——	இது சுரங்களுக்குக் கீழிருந்தால் மத்திம காலம் (அதாவது இரண்டாங்காலம்) என்பதைக் குறிக்கும்.

═══	இது சுரங்களுக்குக் கீழிருந்தால் துரிதகாலம் (அதாவது. மூன்ருங்காலம்) என்பதைக் குறிக்கும்.
~~	இது சுரங்களுக்கு மேலிருந்தால் அந்தந்த இராகத்திற்குத் தக்கவாறு சுரங்களை அசைத்துக் கம்பிதமாகப் பிடிக்கவேண்டும் என்பதைக் குறிக்கும்.
+	இது சுரங்களுக்கு மேலிருந்தால் அன்னிய மேள சுரஸ்தானமென்பதைக் குறிக்கும். உதாரணமாக:- நீலாம்பரிக்கு வரும் கைசிகி நிஷாதம், பைரவிக்கு வரும் சதுசுருதிதைவதம், சாரங்காவிற்கு வரும் சுத்தமத்திமம், ஆனந்தபைரவிக்கு வரும் அந்தர காந்தாரம், அசாவேரிக்கு வரும் சதுசுருதி ரிஷபம். இன்னும் இதுபோல் வரும் சுரங்களையுங் குறிக்கும்.
{ }	இது முதனிலையின் முடிவையும், இடைநிலையின் முடிவையுங் குறிக்கும்.
	இப்புத்தகத்தில் காணப்படும் "சாய்ப்பு" என்பதை "மிசிர சாய்ப்பு" எனக்கொள்க. ஷெ தாளங்களில் எழுதிய கீர்த்தனைகள் (3 - 4) ஆக 7 அட்சரங்களாகவும், (6 - 8) ஆக 14 அட்சரங்களாகவும் சுரப்படுத்தி எழுதப்பட்டிருக்கின்றன.

பாடல் முதற் குறிப்பு முதலியன

இந்நூலில் அடங்கியுள்ள இராகங்களின் பெயரும், பாட்டின் எண்களும், பக்கங்களும்

உ

வையச்சேரி மகாவைத்தியநாத ஐயரவர்களின் தமையனராகிய
இராமசாமி ஐயரவர்களியற்றிய

கந்தபுராணச் சுருக்கத் தமிழிசைப் பாடல்கள்

1

பாயிரம்

முருகப்பெருமானது வரலாறு கூறும் நூலாகிய கந்தபுராணச் சுருக்கத்தினைப் பின்பற்றி, அப்பெருமானது மெய்ப்புகழை இசைத்தமிழாற் பாடப்போந்த இந்நூலாசிரியர், தம் நூல் இனிது நிறைவேறுதல்வேண்டி இடர்தீர்ப்போராகிய விநாயகப்பெருமானை வணங்குகின்ருர்.

விநாயகர் துதி.

இராகம்: ஸ்ரீரஞ்சனி
தாளம்: ச. மட்டியம்

ஆ.: ச ரி க ம, த நி ச்ா
அ.: ச் நி த ம, கா ரி சா

22-வது மேளத்திற் பிறந்தது.

முதல்நிலை

குஞ்சர முகனே அன்பர் இதய
பஞ்சர சுகனே அநகனே குஞ்.

இடைநிலை

செஞ்சர ணங்கதி யென்பவர் தம்பவ
பஞ்சன னேசன ரஞ்சன னேயருள் குஞ்.

இறுதிநிலை

சந்ததம் புகழ்குக தாசனிங் கிதமாய்க்
கந்தபு ராணச்சுருக் கந்தனைப் பதமாய்ச்
செந்தமி ழாலுரை செய்யவற் புதமாய்
வந்தருள் வாய்புகழ் தந்தருள் வாய்திகழ் குஞ்.

முதல். ; ; - *ச்ா ; நி த மா - ம க ரி க | மா ; ; ; - |
. . - குஞ் : ச . ர - மு . க . னே . . . -

| க ரி சா நி த நீ - சா ரி ச ரி க மா ||
அ ன் பர் இ த ய - பஞ்ச ர சு க னே

க ம த நி - *ச்ா ரி , க்ரி ச் நி தா - ம க ரி க | மா ; ; ; - |
அ ந க னே - குஞ் . . . . . ச ர - மு . க . னே . . . -

| க ம ரி ; - ச நி சா ; ; ; ||
. . . . - . . . .

இடை. ; ; - *ச்ா ; நி த நீ ; - த நி | ச்ா ; - ரிக் மா - |
. . - செஞ் . ச ர ணங் . - க தி யென் . - ப வர்தம் -

| ; - க்ரி ரி க் ரி ச்ா - த நி ச்ா நி த ||
: - ப வ பஞ் ச ன னே - ச ன ரஞ் ச ன

ம

மா த நி - * ச் நி ரி ச்ா - நி தா - ம க ரி க | மா ; ; ; - |
னே அருள் - கு ஞ் . . . - ச ர - மு . க . னே . . . -

| க ம ரி ; - ச நி சா ; ; ; ||
. . . . - . . . . . .

இறுதி. ; ; - * நி த நி ச்ா நி தா - ம த நி த | மா - க ம க ரி சா - |
. . - ச ந் த தம் பு கழ் - கு க தா . சன் - இங் கி த மாய்க் -

| ச நி த நி சா சா - ரி கா மா நி தா ||
க ந் த பு ரா ணச் - சு ருக் கந் த னைப்

நி ரி ச்ா - * ரி க் ம்ா - ரி க் ம்ா ; - க் ரி | க் ரி க்ா - க் ம் க் ரி |
ப தமாய்ச் - செ ந் . . - த மி ழா ல் - உ ரை செ ய் ய - வ ற் பு த

| ச்ா ; - ச் நி க் ரி ச்ா - த நி ரி ச் நி த ||
மா ய் - வ ந் த ருள்வாய் - பு கழ் த ந் த ருள்

மா த ஙி - * ச்ா ரீ , க்ரீ ச் ஙி தா - ம க ரி க | மா ; ; ; - |
வாய் தி கழ்- குஞ் . . . . . . ச ர - மு . க . னே . . . -

| க ம ரி ; - ச ஙி சா ; ; ; ||
. . . . - . . . . . .

2

இந்நூற்கு ஏற்புடைக்கடவுளாகிய ஆறுமுகப் பெருமானை ஆசிரியர் வணங்கிப் போற்றுகின்ருர்.

சுப்பிரமணியர் துதி.

இராகம்: ஆரபி	ஆ.: ச ரி ம , ப தா ச்ா	29-வது மேளத்திற்
தாளம்: க. திருபுடை	அ.: ச் ஙி தா ப , ம க ரி சா	பிறந்தது.

முதல்நிலை

வேலனே அருளனு கூலனே வேல. ௧

இடைநிலை

சீலனே சங்கர பாலனே செங்கர . வேல.

இறுதிநிலை

1. கத்தனே யருளங் கத்தனே யாறுமு
கத்தனே செந்தூர கத்தனே நித்தனே வேல.

2. காரநே கம்நேரா காரனேத் தும்நிர்வி
க்காரனே நிரகங் காரனே. சிங்கார வேல.

3. கந்தனே நின்புரா ணந்தனைச் சுருக்கிச்
செந்தமிழ்க் கீர்த்தனஞ் சந்தமா கச்சொல்ல வேல.

4. குகதா சன்வேண்டுஞ் சுகதா யகவே
ரகதா ரகமா ரகதா ரகமாம் வேல.

முதல். பா ; பா - ம க ரீ ; - சா ரி ம க ரீ | ; - சா ; தா |

வே . ல - னே . . . - அ ரு ள . று . - கூ . ல

| சா ; - த ச ரி ம ||

னே . - . . . .

பா த ரி ச் ரி த ப ம க ரீ - ச ரி ம க ரி ச ரீ | ; - ரி ரி ச ஸ தா |

வே . . ல . னே . . . . - அ . ரு . ள . று . - கூ . . . ல

| சா ; - த ச ரி ம ||

னே . - . . . .

பா த ப ம ப த ப ம க ரீ ; - ச ரி ப மா க ரி ச ரீ | ; - சா தா ரீ |

வே . : ல . . . னே . . . . - அ . ரு . . ள : று . - கூ . ல

| சா ; ; ; ||

னே . . .

இடை ம க ரீ ரீ - ம ப தா ; - ச் நி தா ரி ச்ா - | த ரி ச் நி தா பா | ம
ஈ . . ல - னே . . . - ச ங் . க ர - பா . . . . ல னே

| ; - ம க ரி ச ரி ம ||
. - செ ங் க . ர .

பா த ப ம ப த ப ம க ரீ ; - ச ரி ப மா க ரி ச ரீ | ; - சா தா ரீ |
வே . . ல . . . னே . . . - அ . ரு . . ள . று . - கூ . ல

| சா ; ; ; ||
னே . . .

இறுதி. தா பா மா பா ; ; - ம ப த ப ம ப தா - | ; - ச் நி தா தா |
க த் த னே . . - அ . ரு . ள ங் . - . - க . ந் த

| ச்ா - த ச் ரி ச் ரீ ||
னே - ஆ . று . மு

ம் க் ரீ ரீ ச்ா ; ; - தா ரீ ச்ா ச்ா - | த ரி ச் நி தா பா |
க . த் த னே . . - செந் . தூ ர - க . . த் த னே

| ம ப த ப ம க ரி ம ||
நி . . த் த . னே .

பா த ப ம ப த ப ம க ரீ ; - ச ரி ப மா க ரி ச ரீ | ; - சா தா ரீ |
வே . . ல . . . னே . . . - அ . ரு . . ள . று . . - கூ . ல

| சா ; ; ; ||
னே . . .

2. ரி ம பா பா - ம க ரீ ரீ - ச ரி ம க ரி ச ரீ - | சா ; தா சா |
கா . . ர - நே . . கம் - நே . . . ரா . . - . கா . ர னேத்

| ; சா - ரீ ரீ ||
. தும் - மிர் வி

ம க ரீ ரீ - ப ம பா ; - ம ப தா ப த ச்ா - | ச் த ரி ச் தா பா |
கா . . ர - னே . . . - ஙி . ர க ங் . - கா . . . ர னே

| ; - ம க ரி ச ரி ம ||
. - சிங் . கா . ர .

பா த ப - ம ப த ப ம க ரீ ; - ச ரி ப மா க ரி ச ரீ | ; - சா தா ரீ |
வே . . - ல . . . னே . . - அ . ரு . . ள . று . - கூ . ல

| சா ; ; ; ||
னே . . .

3. ச ரி ம க ரீ - சா ; ; - ரீ ; - ரி ம பா | பா ம க ரீ ; - |
க ந் . . த - னே . . - ஙி ன் - பு . ரா ணந் த . னே ச் -

| ரீ ப ம பா ; ||
சு ரு க் இ ச்

ரி ம பா ம ப தா - ப த ச்ா த ச் ரி - ச் ரி ம் க் | ரி - த ரி ச் நி தா - |
செந் . த . மிழ்க்- கி . ர்த் த . னஞ்- ச ந் . . த - மா . . . கச் - .

| த ச் த ப ம க ரி ம ||
சொல் . . ல . . .

பா த ப ம ப த ப ம க ரீ ; - ச ரி ப மா க ரி ச ரி | ; - சா தா ரி |
வே . . ல . . . னே . . . - அ . ரு . . ள . று . - கூ . . ல

| ச்ா ; ; ; ||
னே . . .

4. தா ரி ; - ச் நி தா பா - ம ப த ரி ச் நி த ப | ம க ரீ - ச ரீ ச |
கு க . - தா . . சன் - வே . . ண் டு ஞ் . . சு . க - தா . .

| ச நி தா சா ; ||
ய . க வே .

ரீ சா ரீ ; - பா மா தா ; - தா . ரீ | ச் ரி ச் நி தா பா ; | 12
ர க தா . - ர க மா . - ர க தா . . . ர க -

| ம ப த ப ம க் ரி ம ||
மா . . . . . . ம்

பா த ப ம ப த ப ம க ரீ ; - ச ரி ப மா க ரி ச ரி | ; - சா தா ரீ |
வே . . ல . . . னே . . . - அ . ரு . . ள . று . - கூ . ல

| சா ; ; ; ||
னே . . .

3

உற்பத்திகாண்டம்

இது, குமரவேள் திருவவதாரம் செய்தருளிய வரலாற்றைக் கூறும்பகுதியாகும். திருக்கயிலைமலையின்கண் சிவபிரானுடன் வீற்றிருந்தருளிய உமையம்மையார், இறைவனை வணங்கிநின்று, எம்பெருமானே நின்னை மதியாது இகழ்ந்து இழிநிலையுற்ற தக்கன் என்பானுக்கு மகள் என்னும் பெயரை இதுகாறும் பெற்றிருந்தேன். அப்பழிச்சொல் நீங்குமாறு திருவருள் செய்க எனவேண்ட இறைவன், மகிழ்ந்து, நங்கையே இமயமலையரசன் நின்னை மகளாகப்பெறவேண்டித் தவஞ்செய்கின்றான். நீ அவன் மகளாகச் சென்று வளர்வாயாக. பின்னர் நாம் அவண்வந்து நின்னை மணஞ்செய்துகொள்வோம் என்று அருளிச்செய்ய, இறைவியார் விடைபெற்றுச்சென்று இமயமலையின் ஒருபக்கத்தே விளங்குந் தாமரைத்தடாகத்துச் செவ்விய தாமரைமலர்மேற் குழந்தையாக வந்தருளிய செய்தி முதற்கண் கூறப்படுகின்றது.

இராகம்: பியாகு ஆ.: ச க ம ப நி த நி ச்ா 29-வது மேளத்திற்
தாளம்: ஆதி அ.: ச் நி த நி த ப ம் ப' க ம க ரி சா பிறந்தது.

முதல்நிலை

குழந்தை யாகி இருந்தாள் அம்பிகையிளங் குழந்.

இடைநிலை

தழைந்த வுயிரையெல்லாங் குழந்தையாப் பெற்றவளோர் குழந்.

இறுதிநிலை

1. வரிசைசேர் இமயத்திற் பரிசுறு மானச
சரசெனுந் தடத்தினிற் சரசிச மலர்மேற் குழந்.

2. முக்கணனை யிகழ்ந்த தக்கன்மக ளெனும்பேர்
அக்கணத் தகலவி லக்கண மிகுந்தபெண் குழந்.

3. எண்கொளும் நாலுபு யங்களுஞ் சிறந்தமுக்
கண்களும் விளங்கிடப் பெண்களுக் கரசியோர் குழந்.

4. வருந்தி வருந்திமனந் திருந்தி யிமவான்செய்த
பெருந்தவப் பலன்கைமேற் பொருந்திய தெனச்சிறு குழந்.

முதல். சா கா மா - பா ; பா - கா மா | கா ; ; - மா |
கு மூந் தை - யா . இ - யி ருந் தா . ள் - அம்

| கா ரி சா நீ ||
பி கை யி . ளங்

2. சா கா மா - ப த நி த . - ம ப த ப மா - | கா ; ; - க ரி |
கு மூந் தை - யா . . . - இ . யி . ருந் - தா . ள் - அ ம்

| ப ம க ரி க ரி ச நி ||
பி . கை . யி . ள ங்

3. சா கா மா - ப த நி ச்ா நி பா . - க மா | கா ; ; - ம ம |
கு மூந் தை - யா . . . . இ . - யி ருந் தா . ள் - அ ம்

| க ரி ச நி சா ; ||
. . பி . கை .

இடை. க் ம க ரி ச நி - சா கா மா பா ச்ா - | ; - நி தா ம் பா |
த . மை ந் த . - வு யி ரை யெல் லாங்- . - கு மு ந் தை யா

| ; - கா ம க சா ||
ப் - பெற்ற வ ளோர்

ம ம க ரி ச நி - சா கா மா பா ச்ா - | ம் ம் க் ரி ச் நி ச்ா - |
த . மை ந் த . - வு யி ரை யெல் லாங்- கு . மு ந்தை . யாப் -

| நி ச் நி த ப ம க ரி ||
பெ ற் ற . வ . ளோ .

ச நி - ச கா மா - ப த நி ச்ா நி பா , - க மா | கா ; ; - ம ம. |
. ர் - கு மு ந் தை - யா . . . . இ . - யி ருந் தா . ள் - அ ம்

| க ரி ச நி சா ; ||
. . பி . கை .

௰ இருநி. ; - ம கா ம ப நி தா - ச் சா ச் சா | ; - ச் நீ ச் சா - |
. - வ ரி சைசே . ர் - இ ம யத் தி ற் - ப ரி சு று -

| ச் ச் நி த ப ம் பா ||
மா . . . . ன . ச

; - ம கா ம ப நி தா - ச் சா ச் சா | ; - ச் நீ ச் சா - |
. - வ ரி சைசே . ர் - இ ம யத் தி ற் - ப ரி சு று -

| ச் ச் நி த ப ம் - நி நி ||
மா . . . ன . - ச .

த ப - ம கா ம ப நி தா - ச் சா ச் சா | ; - ச் நீ ச் ச் ப - |
. . - வ ரி சைசே . ர் - இ ம யத் தி ற் - ப ரி சு று . -

| ப த நி ரி சா நி தா ||
மா . . . . ன ச

; - ச் நீ ரி ச்ா ; - நி தா ப தா | ; - ச் நீ த பா - |
. - ச ர செ னு ந் - த டத் தி னி ழ் - ச ர சி ச -

| ; - க மா கா , ||
. - ம லர் மே ல்

சா கா மா - ப த நி ச்ா நி பா , க மா | கா ; ; - ம ம |
கு மந் தை - யா . . . . கி . யி ருந் தா . ள் - அ ம்

| க ரி ச நி சா ||
. . பி ., கை

2. ; , - மா க ரீ - சா , நி சா சா | ; , - கா ம பா - |
. . - முக் க ண - ளே . யி கழ் ந்த . . - தக் கன் ம -

| ப ம் த ப மா கா ||
க . ளெ . ளும் பேர்

; , - கா க மா - ரி க ம க ரி ச - நீ சா | ; , - கா ம பா - |
. . - முக் க ண் - ணே . . . . யி - கழ் ந்த . . . - தக் கன் ம -

| ப த நி த ம ப த ப மா கா ||
க . . . ளெ . . . ளும் பேர்

; , - மா க மா - ப த நீ ச்ா ச்ா - | ச் நி ரி ச் நீ தா - |
. . - அக் க ணத் - த . க ல வி - ல . . க் க ண -

| ப ம் த ப மா கா . ||
. மி . கு ந் த பெண்

சா . கா மா - ப த நி ச்ா நி பா , - க மா | கா ; ; - ம ம |
கு மு ந் தை - யா . . . . இ . - யி ருந் தா . ள் - அ ம்

| க ரி ச நி சா ; ||
. . பி . கை .

3\. ச் ச் நி த பா தா - ப ம் த ப மா கா - | க ம க ரி ச நி சா |
எ ன் . . கொ ளும் - நா . . . லு பு - யு ங் . . க . ளுஞ்

| ; - க மா பா , ||
. - சி றந் த .

ச் நி ரி ச்ா நி தா - க ம த பா ம கா - | ரி க ம க ரி ச நி சா |
எ ன் . . கொ ளும் - நா . . . லு பு - யங். . . . க . ளுஞ்

| ; - க மா ப பா ||
. - சி றந் த முக்

நி நி த ப ம க மா - ப நி தா ச்ா ச்ா - | க் ம் க் ரி ச் நி ரி ச் - |
க ண் . . க . ளும் - வி . ளங் கி டப் - பெண் . . க . ளுக் -

| நி த ப ம் த ப ம க ||
க . ர . சி . யோ ர்

சா கா மா - ப த நி ச்ா நி பா , - க மா | கா ; ; - ம ம |
கு மூந் தை - யா . . . . கி . - யி ருந் தா . ; ள் - அ ம்

| க ரி ச நி சா ; ||
. . பி . கை .

4. கா மா பா - நி த ப ம் த ப ம க கா - | க ம த ப ம க ரி - |
வ ருந் தி - வ . ரு ந் தி . ம . ளம் - தி . ரு ந் தி . இ -

| ம ம க ரி ச நி சா ||
ம . வா ன் செ ய் த

; - ச சா க மா பா பா - பா ம ப தா | ; - ச் நீ த பா - |
. - பெ ருந் த வப் ப ல்ன் - கை மே . ல் . . -பொ ருந் தி ய -

| ப ம் த ப மா கா ||
தெ . ன ச் சி று

சா கா மா - ப த நி ச்ா நி பா , - க மா | கா ; ; - ம ம |
கு ழந் தை - யா . . . . . இ . - யி ருந் தா . ள் - அ ம்

| க ரி ச நி சா ; ||
. . பி . கை .

+ இக்குறி பிரதிமத்திமத்தையும், கைசிகிநிஷாதத்தையுங் குறிக்கும்.

4

இமயமலையில் தவஞ்செய்துகொண்டிருந்த மலையரையன், தாமரைத்தடாகத்தில் விளங்கிய குழந்தையைக்கண்டு எடுத்துச்சென்று, தன்மனைவியாகிய மேனை கையிற் கொடுத்து மகிழ்கின்ருன். உலகமீன்ற பெருமுதல்வியாகிய இறைவியார் அவ்விருவர் பாலும் மகளாய்வளர்கின்ற இயல்பு இப்பாடலிற் குறிக்கப்படுகின்றது.

இராகம்: பூர்ணசந்திரிகா. ஆ.: ச ரி க ம ப த ப ச் 29-வதுமேளத்திற்
தாளம்: ஆதி. அ.: ச் நி ப த ப ம க ம ரி ச பிறந்தது.

முதல்நிலை

இமவான் மகளாய்வளர்ந் திருந்தாள் ஶ்ரீம.

இடைநிலை

அமைவா முலகோடெண்ணான் கறங்களை யும்புரிந்தாள் இம.

இறுதிநிலை

1. தக்கன் மகளெனும்பேர் தனைமாற்றி உங்கள்
நற்குடிப் பெண்ணாய்வாழ நண்ணினே னென்றுசாற்றி இம.

2. கரநான்குங் கண்கள்மூன்றுங் காட்டி யொளித்துப் - பின்
இருகை இருகண்கள்கொண் டினிய காட்சியளித்து இம.

3. தண்டை பாடகம்பாத சரங்குலுங் கப்பதக்கங்
கண்ட சரமுதலாங் கலன்கள் மெய்யிலிலங்க இம.

4. பவளக்கால் வைரச்சட்டம் பரிவாலே கூட்டித்
துவளா நீலப்பலகை தொகுத்த தொட்டிலின்மேலே இம.

5. தந்தைதா யார்சுற்றத் தார்கூடி நின்று
சிந்தை மகிழச்செய்யும் செயல்செய்து விளையாடி இம.

முதல். பா பா ப ம கா - மா ரீ சா ; | ; - ப பா ாி சா - | ரீ ; ; ; ||
இ ம வா . ன் - ம க ளா . ய் - வ ளர்ந் தி ருந் - தா . . ள்

2. பா பா ப ம கா - மா ரீ ாி க ம ாி | சநி - ப பா ாி சா - | ரீ , ச ச ாி க ம ||
இ ம வா . ன் - ம களா . . . . ய் - வ ளர்ந் திருந் - தா . . . . . ள்

3. பா பர் ச் நி ப ம - க ம ரீ ாி க ம ாி | சநி - ப பா ாி சா - | ரீ ; சா ; ||
இ ம வா . . ன் - ம . க ளா . . . . ய் - வ ளர்ந் தி ருந் - தா . . ள்

இடை. க ம ாி ரீ ச - க ம ப தா ப - ச்ா ச்ா | . ச் - ப ச்ா ச் ச் நி | பா - த ம ாி ாி க ம ||
அமைவா. ம் - உலகோ . டு - எண்ணுன் . கு - அறங் களை . . யும் - பு ாி ந் தா . ள்

பா பா ச் நி ப ம - க ம ரீ ாி க ம ாி | ச நி - ப பா ாி சா - | ரீ ; சா ; ||
இ ம வா . . ன் - ம . க ளா . . . . ய் - வ ளர்ந் தி ருந் - தா . . ள்

இறுதி. பா ரீ ; - ாி க ம ரீ - சா ச ச நி - | பா ாி ச ரீ ; - | க ம ப ம ரீ ; ||
தக் கன் - ம களெனும்- பேர் தனே. - மா . ற் றி . - உ ங் . . க ள்

சரிகமா, - ரிகமபா, - தபச்ா | ; - ச் ரி ச் நி பா - | ப ம க ம ரி க ம ||
நற்குடிப் -பெண். ணுய் - வா. மு . - நண்ணி . லேன் - என் று . சாற்றி .

பா பா ச் நி ப ம - க ம ரி ரி க ம ரி | ச நி - ப பா ரி சா - | ரி ; சா ; ||
இ மவா . . ன் - ம . களா. . . .. ய் - வ ளர்ந் தி ருந் - தா . . ள்

2. கமபா தப - ச்நிபா - பமகம ரி - | ச நி ப ரி , - க ம | , ரி , - ப ம ரி ||
கா ரான்கும் - கண்கள் - மூ .. . ன் றம்- கா. ட் டி. . - ஒ ளி த் து ப - பி ன் .

க ம பா ; - த ப ச்ா ச்ா - ச் ரி க் ம் | ரி ; - ச் ரி ச் நி - | பா , ம ரி கா ம ||
இரு கை . - இருகண் கள் -கொண். . டு . - இ னி ய .. - கா ட் சி ய ளித் து

பா பா ச் நி ப ம - க ம ரி ரி க ம ரி | ச நி - ப பா ரி சா - | ரி ; சா ; ||
இ மவா . . ன - ம . களா . . . . ய் - வ ளர்ந் தி ருந் - தா . . ள்

3. த ப ச்ா ; - ப ச் நி பா , - பா த ப | ச் நி - ப ம ரி ரி க ம - | ப த ப ச்ா , ரி ||
தண்டை . - பா. ட க ம் - பா த ச ர ங் - குலுங் க . ப் - ப த க் கம் ; .

க் ம் ரி ; - ச் ரி ச் நி பா ; - ப ம | க ம ரி ; - ச் நி | பா , - ம ரி க ம ||

க ண்ட . - ச ர மு த லா ங் - க . ல ன் க ள் - மெய் யில் . - இ லங் க .

பா பா ச் நி ப ம - க ம ரி ரி க ம ரி | ச நி - ப பா ரி சா - | ரி ; சா ; ||

இ ம வா . . ன் - ம . க ளா . . . . ய் - வ ளர்ந் தி ருந் - தா . . ள்

4. ப ம ரி கா மா - ப த ப ம ரி சா - | ப பா ரி , ரி - | ச ரி க ம பா ; ||

ப வ ளக் கா ல் - வ யி ர ச் சட்டம் - ப ரி வா . லே - கூ . . ட் டி த்

த ப ச் நி பா - ப ம க ம ரி - க ம பா - | த பா ரி , - ச் நி | ப பா - ரி ரி க ம ||

தூவளா . . - நீ . . . லப் - ப ல கை- தொகுத் த . - கொட் டி லின் - மேலே . .

பா பா ச் நி ப ம - க ம ரி ரி க ம ரி | ச நி - ப பா ரி சா - | ரி ; சா ; ||

இ ம வா . . ன் - ம . க ளா . . . . ய் - வ ளர்ந் தி ருந் - தா . . ள்

5. த ப ச்ா ; - ச் ப ரி ; - க் ம் ப் ம் | ரி ச்ா - ச் ரி ச் நி | பா - ப ம க ம ரி ||

த ந்தை . - தா . யா ர் - சு ற் ற த் தா ர் . - கூ . . . டி - நி ன் . . று

த த ப ம ரி - க ம ப தா ப - ப ரி ச்ா | ; ; - ப ச் நி ப | , ம - ம ரி ரி க ம ||
சி ந்தை . . - மகிழ . ச் - செய்யும் . . - செய ல் செ ய்து - வி ளையா . டி

பா பா ச் நி ப ம - க ம ரி ரி க ம ரி | ச நி - ப பா ரி சா - | ரி ; சா ; ||
இ ம வா . . ன் - ம . களா . . . . ய் - வ ளர்த் தி ருந் - தா . . ள்

5

மலைமகளாகிய அம்மையார் தமது ஐந்தாம்யாண்டில் சிவபெருமானையடைய வெண்ணித் தவம்புரிகின்றார்கள். இறைவனும் சனகர்முதலிய முனிவர் நால்வர்க்கும் மெய்ப்பொருளையுணர்த்தல்வேண்டி யோகுகூடியிருக்கின்றான். தம்துயர் நீங்க அவனது யோக நிலையை மாற்றவெண்ணிய தேவர்கள், இறைவன்பால் மன்மதனையனுப்ப, அவனும் சிவபிரான்மேல் மலரம்புகளையெய்து அவனது நுதல்விழியால் நீறானான். பின்னர் யோகுநீங்கிய பெருமான், மன்மதனை யிழந்துவருந்தும் இரதிக்குப் பார்வதியார் திருமணத்தில் அவனை யுயிர்ப்பித்து அருள்வதாகத் திருவாய்மலர்ந்து, பார்வதியாரது தவநிலை கண்டு மகிழ விரும்பிச் சிவசின்னங்களணிந்த கிழவேதியராய் இமயத்திலுள்ள தவச்சாலையை யடைகின்றார்.

இராகம்: கமலாமனோகரி   ஆ.: ச கா ம ப நீ ச்ா   27-வது மேளத்திற்
தாளம்: ஆதி   அ.: ச் நி தா ப ம கா சா   பிறந்தது.

முதல்நிலை

தவசி போல வடைந்தார் சந்திரசேகரர்   தவ.

இடைநிலை

சிவசிவ சிவவென்று செபித்துவிரைந்துசென்று   தவ.

இறுதிநிலை

1. தந்தைதாய் நித்தம்வந்து தவநிலை கண்டுகந்து
சிந்தை யுருகிச்செல்லச் சிவைவா ழிடத்தில் மெல்லத்   தவ.

2. மங்கையர் பணிசெய்ய மலைமக ளுலகுய்யச்
சங்கையில் லாமல்நாடித் தவஞ்செய்யு மிடந்தேடி   தவ.

3. இமய மலையில்கண்ணி யுமையைக்கல் யாணம்பண்ணிக்
குமரனை யருள் என்று அமரர் வணங்கவன்று   தவ.

4. மதனனை யிமயத்தில் மணஞ்செய்யுஞ் சமயத்தில்
உதவுவோ மென்றிரதிக் குரைத்துத் தயாநிதி — தவ.

5. திருநீறு கண்டிகை சிகைமுந்நூல் குண்டிகை
கரமிசைக் குடைதண்டு காவி யாடை கொண்டு — தவ.

6. பூதலத் தோர்மகிழப் புனித மிகுந்தகிழ
மாதவ ரென்றெவரும் வணங்க மகிமைதருந் — தவ.

முதல். சா கா மா - பா ச் ரி த ப - ம க ப ம | கா ; ; - க ம | பா - ம ப ம க ச நி ||
த வ சி - போ . . ல , - வ . டைந் தா . . ர் - சந் த்ர - சே . க . ர ர்

2. சா கா மா - ப ரி ச் ரி த ப ம - த ப ம | கா ; ; - த த | ப ப - ம ம க க ச நி ||
த வ சி - போ . . . ல . . . - வடைந் . தா . ர் - ச ந் த்ர . - சே . க . ர ர்

3. ச க ம க சா - க ம ப ரி ச்ரா - ரி ச் க்ரா | ச் க் ம் க்சா - ச் ரி | த ப - ம ப ம க ச நி ||
த . வ . சி - போ . . . ல - வ . டைந் தா . . . ர் - ச ந் த்ர . - சே . க . ர ர்

கா சா கா - ச நி தா பா - சா நீ | சா ; ; ; | ; ; ; ; ||

த வ சி - போ . . ல - வடைந் தா . . ர் . . . .

இடை. ; - க சா க மா - பா நீ ச்ா ச்ா | ; - ச் ச்ா ச் ச்ா - | ச் நி தா பா பா ||

. - சி வ சி வ - சி வவென் று . - செபித் து வி - ரைந் து சென் று

; - ம க ச க மா - பா நீ ச்ா - நி ச் | க்ா - ம் க்ா ச் ச் நி - | ச் நி தா பா - பா த ப ||

. - சி வ . சி வ - சிவவென் - று . . - செபித் து வி . - ரைந்து சென் - று . .

ம க - ச கா ச - ச நி தா பா - சா நீ | சா ; ; ; | ; ; ; ; ||

. . - த வ சி - போ . . ல - வ் டைந் தா . . ர் . . . .

இறுதி. ; - ச் நீ த பா - மா பா கா மா - | ; - க மா ப நீ - | ச்ா ச்ா ச்ா ச்ா ||

. - தந்தை தாய் - நித் தம் வந் து - . - த வ நி லை - கண் டு கந் து

; - ச்ா ச் நி தா பா - மா பா ம க மா - | ; - ம கா ச சா - | க ம பா ச்ா க்ா ||

. - தந்தை . . தாய் - நித் தம் வ ந் து - . - த வ நி லை - க ண் டு கந் து

; - ச்மா க்ஸா - ச்நி த ப ம ப நீ | ; - ச் ஸா ஸா ஙி | தா பா - த ப ம க ||
. - சி ந் தை யு - ரு . இ ச் செ ல் ல ச் - சி வை வா ழி டத் தில் - மெ ல் ல த்

சா கா சா - ச நி தா பா - சா நீ | சா ; ; ; | ; ; ; ; ||
த வ சி - போ . . ல - வ டைந் தா . . ர் . . . .

2. ; , - ம க ச சா - ச நி த ப நீ சா | ; - க மா ப பா - | ப நி ச் நி தா பா ||
. . - ம ங் கை யர் - ப . ணி . செய் ய . - ம லை ம கள் - உ . ல . குய் ய

; - க மா ப பா - ப நி ச்ா ச்ா - நிச் | க்ா - ச் நீ த பா - | ச் நி த ப ப ம கா ||
ச் - ச ங் கை யி ல் - லா . . மல்-நா . டித் - தவஞ் செய்யும் - இ . ட ந் தே . டித்

சா கா சா - ச நி தா பா - ச நீ | சா ; ; ; | ; ; ; ; ||
த வ சி - போ . . ல - வ டைந் தா . . ர் . . . .

3. ; - நி ச் நி த பா - ம க ப ம கா சா | ; - நி ச நி த பா - | பா ச நி சா சா ||
. - இ ம . ய ம - லை . யில் நண் ணி . - யு மை . யைக் கல்- யா ண ம் பண் ணி

; - நி சா க மா - பா நீ ச்ா ச்ா | ; - க் ச்ா ச் நீ - | தா பா ப ம கா ||
க் - கு ம ர னை - ய ருள் என் று . - அ ம ரர் வ - ணங் க வ ன் று

சா ம க சா - ச நி தா பா - சா நீ | சா ; ; ; - | ; ; ; ; ||
த வ . . சி - போ . . ல - வடைந் தா . . ர் - . . . .

4\. ; - த ப தா தா - பா ப ம கா சா | நி ச கா ச க மா - | க ம ப ம பா பா ||
, - ம த ன னை - யி ம . யத் தில் ம . ணஞ் செய்யும் - ச . ம . யத் . தில்

; - ப நீ த பா - க ம ப நி ச் நி ச்ா | ; - ச் நீ த பா - | ம . க ப ம கா சா ||
; - உ த வு வோ - மென் றி . ர . தி க் - கு ரைத் துத் த - யா . . . , நி தி .

ச க ம க சா - ச நி தா பா - சா நீ | சா ; ; ; | ; ; ; ; ||
த . வ . சி - போ . . ல - வ டைந் தா . . ர் . , ...

5\. க ம பா - ச் நி தா பா - ம க ச க மா - | கா மா பா - ச் நி | த ப ம ப ம க சா ||
தி . ரு - நீ . . று - கண் டி . கை . சி கை மூந் - நூ . , ல் கு ண் டி . கை

ரு மகசா-கமபா-பநிச்ா-நிச்க்ா-| ம் க்ச்ா ச்ா-ச்நி | தாபா- மபமக ||
க, ர-மி.சைக்-கு.டை-தண்டு- கா . . வி -யா . . டை -கொண்டு .

சாகக சா-ச நிதா பா-சா நீ | சா ; ; ; . | ; ; ; ; ||
த வ . சி -போ . ல.-வடைந் தர் . . ர் . . . .

6. பபமக சா- ச நிசா-கம்பாப | பநிச்ா ச்நிபநி -| ச்ா ச் நி ச்ா க்ா ||
பூ . த . லத் -தோ. ர்-ம.கிழப் பு . னி த , யி. - குந் த . கி ழ

ம்க்ம்க்ச்ா நி-பநிச்நிதா பா- | மப மகசா -கம | பநிச்நி -தபமக ||
மா . . . த வ-ரென்றெ. வரும்- வ, ணங்க -ம . . கி. மை.-த .ரும்

சா கா சா-ச நிதா பா-சா நீ | சா ; ; ; | ; ; ; ; ||
த வ சி -போ: . ல -வடைந் தா . . ர் . . . .

6

பார்வதி தேவியாரது தவச்சாலையை யடைந்த மறை முதியோர், இறைவனை மணந்து கொள்ள விரும்பித் தவஞ்செய்யும் உமையைநோக்கி, "நின் உடலை வருத்தித்தவஞ் செய்தலால் நீ பெறுதற்குரிய பயனொன்று மில்லை. சிவனோ தாயுமிலி, தந்தையிலி, தான் தனியன். அவனது கோயிலோ சுடுகாடு. அவன் உடுக்கும் உடையோ புலித்தோல். எலும்பு பாம்பு முதலியனவே அவனணியும் அணிகலன்கள். எருக்கு ஊமத்தை முதலாக வெறுக்கப்படு பூக்களே அவன் விழைந்தணியும் மலர்களாம். பூதங்களே சேனைகள். உண் றும் உணவோ நஞ்சு. பூசும் சாந்தமோ சாம்பல். ஊர்தியோ எருது. மேற் கொண்ட தொழிலோ மிகவுமிழிந்ததாகிய இரத்தற்றொழில். உண்கலனோ மண்டையோடு. சிவன், தனக்கென்று ஒரு குணமும் வடிவமும் வாய்க்கப் பெறுதவன் எல்லாச் செல்வங் களும் நிரம்பப்பெற்ற இமவான் மகளாகிய நீ ஈசனுடைமையாக இங்கு எடுத்துரைத்த பொருள்களுள் எந்தப் பொருளை விரும்பி அவனை மணந்துகொள்ள ஆசைப்படுகின்றனை? உயிர்களின் இன்ப நுகர்ச்சியை புணராது காமனைக்காய்ந்தவனைக் கணவனாகப்பெற நினைப் பது பயனுள்ள நினைவாகுமோ"? என வினவுகின்றார்.

இராகம்: மோகனம்	ஆ.: ச ரி க , ப தா ச்	28-வது மேளத்திற்
தாளம்: சாய்ப்பு.	அ.: ச் தா, ப கா, ரி சா	பிறந்தது.

முதல்நிலை

இந்தப் பொருள்களுக்குள் எந்தப் பொருளைவேண்டி
ஈசன்மே லாசை கொண்டாய் இந்த.

இடைநிலை

சந்தர்ப்பந் தெரியாமற் கந்தர்ப்பன் றனைக்கண்ணால்
முந்திப் பொடித்தவனைச் சிந்திப்பது நலமோ இந்த.

இறுதிநிலை

1. உடைதோல் கொம் பெலும்புபாம் போடு தலைதரித்தான்
அடையு மெருக்குமத்தம் அறுகு தும்பைபரித்தான்
படைகள் கொடியபூதம் பார்த்தால் வரும்பிரமாதம்
தொடருமம் பலமிடம் சுவையாயுண் பதுவிடம் இந்த.

2. சூலமும் மழுமானும் சுடுதீயும் உடுக்கும்
கோலமாங் கரத்திலெக் காலும் விடாதடுக்கும்
மேலும்வெண் பொடிப்பூச்சு விரைசேர் சந்தனமாச்சு
ஏலவூர் வதுமாட்டில் இரப்பது தலையோட்டில் இந்த.

3. பெற்றதா யுமில்லான் உற்றதந் தையுமில்லான்
சுற்று முறவொன் றில்லான் சற்றுமோர் குணமில்லான்
மற்றுமோர் வடிவில்லான் வகுக்கிலோர் முடிவில்லான்
வெற்றி யிமவான்பெற்ற விமலையே யமைவுற்ற இந்த.

முதல். ; ; ச ரி = கா ; கா ; | கா , கா , = கா ரீ ரி க பா |
. . இ ந் த ப் பொ . ரு ள் க் . ளு க் கு ள் .

; ; ப க = ப தா ப பா ; | கா , ரீ , = ரீ சா ச ரி க ரி ||
. . எ ந் த . ப் பொ . ரு . ளோ . . வே ண் டி . . .

க ரி ச த ச ரி = கா சா ரீ கா | ப கா கா , = கா ரீ ரி க பா |
. . . . இ ந் த . ப் பொ ரு ள் க , ளு க் கு ள் .

க ப தா பக = ப த சா தா பா | கா , ரீ , = ரீ சா . ச ரி க ப ||
. . . எ ந் த் . . ப் பொ ரு . ளோ . வே ண் டி . . .

க ரி ச த சரி = கா ; ரி க த ப | க ரீ சா , = ; ச தா ச ரீ |
. . . . ஈ.. சன். மே . . . லா . சை . கொ ண் . .

கா ; ; = ; ; ரி க த ப | க ரீ சா , = ; ; ; ; ||
டா . . . ய் . . . .

இடை. ; ; ப க = பா ; தா ; | ச்ா , ச்ா , = ச்ா ; ச்ா ; |

. . ச ந் த ர்ப் ப ந் தெ. ரி . . யா . ம .

; ; ச் ரி = க்ா ரீ ரீ ச்ா | ச்ா , தா , = தா பா க ப தா ||

. ற் க ந் த ர்ப் ப ன் ற . னை க் க ண் ணு . .

; ; ச்ா = ச் த ப க பா தா | ச் தா ச்ா , = ச் ரீ ச் ச் ரி க்ா |

. ல் ச ந் த . . ர்ப் ப ந் தெ . ரி . . யா . . ம . .

; ; ச் ா = ச் ரி க் ப் க் ரி ச்ா | தச் தச் ரீ ச் = ச் த ரி ச் த ப தா ||

. ற் க ந் த . . ர்ப் ப ன் . ற . னை . . க் க ண் . . ணு . .

; ; ப த = ப த ரீ ச்ா ; | ச் தா த பா = பா ; க ப தா |

. ல் மு ந் தி . ப் பொ . டி த் த . வ . . னை . .

; ; ரி ச் = த ா ; பா ; | கா , பா , = ப க தா பா ; ||

, ச் சி ந் தி ப் ப . து . . . ந . . ல .

க ரி ச த || ௐ
மோ . . . "இந்தப் பொருள்" பல்லவியைப்பாடி நிறுத்தவும்.

இறுதி ; ; ப க = பா ; பா ; | பா பா ; = ப க த ப தா ; |
. . உ டை தோ ல் கொ ம் பெ ரு ம் பு . . . பா .

; ரி ச்ா = தா ; பா ; | ப க ப தா ப = பா ; கா ரி ||
ம் போ டு . த . கை . த . ரி . த் தா . . . .

ச ரி கா க ப = கா ரி ரி சா | ச ரி க ரி சா = சா தா பா ; |
. . ன் அடை யு . மெ .. ரு . . . க் கு ம த் த ம் .

; ; த ச = ரி ; ச்ா , ரி | கா ; ப க = தா ; பா ; ||
. , அ று கு . . து . ம் பை . ப . ரி த் தா ன்

; ; ப க = பா ; பா ; | ச்ா , ச்ா , = ச் ரி ச் ச் ரி கா |
. . ப டை கள் . கொ . டி . . ய . பூ . . த ம் .

; ; க் ப் = க் ரி ச் ச்ா ; | ச்ா , ச் ச்ா = ச் த ரி ச் த ப தா ||
. . பா ர்த் தா . ல் வ . ரு ம் பி ர . மா . . . த ம் .

; ; ப த = ப த ரி ச்ா ; | தா , பா , = பா ; க் ப தா |
. . தொட ரு ம் அ ம் ப . ல . மி . ட ம் .

; ; த ச் = தா ; பா ; | கா , பா , = பக தா பா ; ||
. . சு வை யா . யு ண் ப . து . வி . . ட ம்

க ரி ச த ||
. . . . " இந்தப்பொருள் " பல்லவியைப் பாடி நிறுத்தவும்.

இறைவனை யிகழ்ந்த மறையவர் சொற்கேட்டுவருந்திய உமாதேவியார், வேதியரை வெகுண்டு விலக்க, அத்தவநிலைகண்டு மகிழ்ந்த பெருமான், பார்ப்பனக்கோலம் நீங்கி விடைமேற்ருேன்றி, 'நின்னை நாளை மணப்போம்' என்றுரைத்துக் கயிலையை யடைந்தார். அஃதுணர்ந்த மலையரசன் கயிலையை யடைந்து தன்மகளை மணந்தருளும்படி இறைவனை வேண்ட, இறைவனும் தேவர் முனிவர் முதலியோர் புடைசூழத் திருமணக்கோலத்துடன் இமயத்திற்கு எழுந்தருளுகின்றுன்.

இராகம்: யதுகுல காம்போதி ஆ.: ச ரி மா க ம ப த ச்ா 28-வது மேளத்திற்

தாளம்: ஆதி. அ.: ச் நி த ப ம் க ரி க ரி சா பிறந்தது.

முதல்நிலை

இமாசலத்தினுக் கெழுந்தருளினன் எங்களை யாள் பெருமான் இமா.

இடைநிலை

உமா தேவியென்னுங் குமாரி தனக்குச் சமான மாகிய புமா னுகவே இமா.

1. நந்தி நினைந்திடலும் வந்த வுருத்திரர் அனந்த பேதமாக - நெருங்க அயன்
நாரணன் முதற்சுர ரசுரர் முனிவர்திசை நாதரி யக்கர்நாக - உலகத்தவர்
கந்தர்வர் கின்னரர் சித்தர்வித் யாதரர் கருடர்சூழ்ந்துபோகத் - திநட்சத்ரம்
காலம் வருஷம்ருது வேலு மயனந்திங்கள் கோல வுருக்கொண்டிரு.பாலினு மேக இமா.

2. அம்புய ஞபர ணங்களைக் கொண்டுவந் தணிந்தரு ளெனவேண்டச் - சிறுநகை செய்
தணிந்தது போல்நினைந் தனமெனத் தீண்டித்தன் அங்கத்தில்
முனம்பூண்ட-பணியெல்லாம்
பைம்பொன் மணிக்கலங்க ளாயுடல் முழுதும் பரந்தொளி மிகவீண்டப்-புரிந்தருளிப்
பாடி லாதபல கோடிமன் மதர்போ லிடிலா வழகு கூடிட நீண்ட இமா.

3. கோதறு நந்திகை கொடுக்க வடியில் மணிப் பாதுகை கதிர்போலே-பூண்டு சென்று
குண்டோ தரன்முது கினிலடி யூன்றிக் கொண்டுவி டையின்மேலே - யேறிடலும்
திதில்குண் டோதரன் எழுந்து குடைபிடிக்கச் சிலர்கவ ரிமுன்பாலே - வீசிவரச்
சேர்த்திடும் வாத்யங்க ளார்த்திட வேதங்கள் கீர்த்தியைச் சொலஅட்ட
மூர்த்தியக்காலே இமா.

4. தும்புரு நாரதர் யாழொடு பாடவ ரம்பையர் நடமாடத்-தீர்த்த மங்கையர்
சுரர் முனி வர்மங்கையர் திருமகள் முதலோர் சூழ்ந்துமங் கலம்பாட-மலைமரங்கள்
அம்புதி நதிமுத லனைத்துந் தேவவடி வடைந்தெங் கணுங்கூடக்-கணங்கள்தொழ
